பக்கங்கள்:-26

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 14 | சனிக்கிழமை | 26.04.2025 | அதிர்வு 265

## இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் திங்கள் ரணில் ஆஜர்



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளைமறுதினம் திங்கட்

06




# வறுமையின் அபாயம் நாட்டில் அதிகரிப்பு!

## உலக வங்கி எச்சரிக்கை

**2025 ஆம் ஆண்டிற்குரிய இலங்கைக்கான அபிவிருத்தி அறிக்கையை வெளியிடும் போதே இந்த தகவலை உலக வங்கி தெரிவித்துள்ளது.**

**மேலும் இலங்கையின் பொருளாதாரம் தற்போது குறிப்பிடத்தக்க மாறுபாடுகளைக் காட்டி வருகிறது என இந்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது**

06

# மோடியுடன் தொலைபேசியில் உரையாடிய அநுர

### காஷ்மீர் பயங்கரவாதத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரங்கல் தெரிவிப்பு



இந்தியாவின் காஷ்மீரின் பஹல்காமில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் நேற்றுப் பிற்பகல் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இரு நாட்டுத் தலைவர்களும் சுமார் பதினைந்து நிமிடங்கள் தொலைபேசியில் உரையாடினர்.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் குறித்து தான் மிகவும் அதிர்ச்சியடைந்ததாகக் கூறிய ஜனாதிபதி, இந்திய மக்களுடன் இலங்கை எப்போதும் சகோதரத்துவத்துடன் பிணைந்துள்ளது என்றார்.

06




இலங்கைத் தமிழரசு கட்சிக்கு ஒரு தலையெழுத்து. அதைப் பின்னடைவில் – பாதிப்பில் – போடப் பண்ணுவதற்கு வெளியில் இருந்து எதிரிகள் தேவையில்லை. உள்ளேயே அந்த வேலையைச் செய்வதற்கு – 'ஸேம் சைட் கோல்' அடிப்பதற்கு – பலர் எப்போதும் உள்ளேயே காத்திருக்கிறார்கள் என்பதுதான் அக்கட்சியின் துரதிஷ்டம்.

இப்போது அந்த வேலையை கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானமே ஆரம்பித்திருக்கின்றாரோ என்ற சந்தேகம் எழுந்திருக்கின்றது.

2015 – 2019 நல்லாட்சி காலத்தின் போது இலங்கைத் தமிழரசுக் கட்சி உட்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்களிப்போடு உருவாக்கப்பட்ட புதிய அரசமைப்புக்கான நகல் வரைவில் 'ஏக்கிய ராஜ்ய' என்ற சொற்றொடருக்கு விளக்கத்துடன் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. அந்த அரசமைப்பு நகலைத் தொடர்ந்து முன்னெடுத்து நாட்டுக்கு புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவது குறித்தே தேசிய மக்கள் சக்தி தேர்தல் சமயத்தில் பேசி வந்தது. அதுவே தேசிய

06




# 5 ஆவது தவணைக் கடனை விடுவிக்க சர்வதேச நாணய நிதியம் இணக்கப்பாடு

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்படும் நீடிக்கப்பட்ட கடன் வசதியின் 05 ஆவது தவணையை விடுவிப்பதற்கு அதிகாரிகள் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இலங்கைக்கு 344 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி கிடைக்கவுள்ளது.

தமது அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது இலங்கை அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை மற்றும் இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு விடயங்களை ஆராய்ந்து இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்தது.

பொருளாதார இலக்குகளை அடைவதற்கான இலங்கையின் முயற்சிகளை சர்வதேச நாணய நிதியம் பாராட்டியுள்ளது.

அத்துடன், கடன் மறுசீரமைப்பை இலங்கை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளமையினால் 5ஆம் தவணையை விடுவிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலாபமீட்டாத டிப்போக்களுக்கு அடுத்த மாதம் வரை அவகாசம்



இலாபமீட்டும் மற்றும் தரமான சேவையை வழங்குவதற்காக இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போ முகாமையாளர்களுக்கு அடுத்த மாத இறுதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு தெரிவித்தது.

அவ்வாறு செய்யத்தவறும் நபர்கள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

தற்போது காணப்படும் 107 டிப்போக்களில் 60 வரையான டிப்போக்கள் மூலம் மாத்திரமே இலாபம் கிடைப்பதாக பிரதி அமைச்சர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

# ஐக்கிய அமெரிக்காவின் வர்த்தக பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் தொடர்பில் அரசாங்கம் அறிக்கை

பரஸ்பர தீர்வை வரி தொடர்பில் ஐக்கிய அமெரிக்காவின் வர்த்தக பிரதிநிதிகளுக்கான அலுவலகத்துடன் வொஷிங்டன் டி.சியில் இடம்பெற்ற கலந்துரையாடல் தொடர்பில் அரசாங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் தூதுக்குழுவினர் வொஷிங்டன் டி.சியிலுள்ள ஐக்கிய அமெரிக்காவின் வர்த்தக பிரதிநிதிகளுக்கான அலுவலகத்தில் கடந்த 22ஆம் திகதி அதன் தூதுவர் துயஅநைளழ புசநநச-ஐ சந்தித்துள்ளனர் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்போது இலங்கை அரசாங்கத்தினால் ஐக்கிய அமெரிக்க வர்த்தக பிரதிநிதி தூதுவர் Jamieson Greer-க்கு அனுப்பப்பட்ட கடிதப் பரிமாற்றத்தின் மூலப்பிரதி, நிதி அமைச்சர் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவின் ஆலோசனைக்கமைய இலங்கை தூதுக்குழுவினரால் அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் முகங்கொடுத்த சவால்கள் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சவால்களை வெற்றிகொள்வதற்கும் பொருளாதாரத்தை மீண்டும் முழுமையாகக் கட்டியெழுப்புவதற்கும் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது பிரதிநிதிகளால் தூதுவர் Jamieson Greer-க்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# டேன் பிரியசாத் கொலை வழக்கில் சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரிப்பதற்கு நீதிமன்றம் அனுமதி

சமூக செயற்பாட்டாளரான டேன் பிரியசாத் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரிப்பதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.


சமூக செயற்பாட்டாளரான டேன் பிரியசாத் கடந்த 22ஆம் திகதி இரவு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இந்த கொலைச் சம்பவம் தொடர்பில், பிரதான சந்தேகநபராகக் கருதப்படும் துலான் மதுசங்க எனப்படும் துலா என்பவரை பொலிஸார் கைது செய்து நேற்று கொழும்பு புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

மிரிஹான விசேட விசாரணை பிரிவின் ஊடாக இந்த சந்தேக நபர் கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷண கெக்குணவல முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டார்.

இதன் போதே சந்தேக நபரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரிப்பதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

உள்ளூராட்சி சபைகள் தேர்தல் - 2025
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
சாவகச்சேரித் தொகுதி
மாபெரும் தேர்தல் பரப்புரைக் கூட்டம்
காலம் : 26.04.2025, சனிக்கிழமை
நேரம் : பி.ப. 4.00 மணி
இடம் : பேருந்து நிலையம் அருகாமை, சாவகச்சேரி
தலைமை
திரு. கேசவன் சயந்தன்
(தலைவர், சாவகச்சேரித் தொகுதிக் கிளை)
தொடக்கவுரை
திரு. சங்கரன் தங்கராசா
(செயலாளர், சாவகச்சேரித் தொகுதிக் கிளை)
எழுச்சியுரை
கௌரவ இராசமாணிக்கம் சாணக்கியன்
(பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு மாவட்டம்)
சிறப்புரைகள்
திரு. M.A. சுமந்திரன்
பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
கௌரவ C.V.K. சிவஞானம்
தலைவர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
நன்றியுரை
திருமதி சிவமங்கை இராமநாதன்
(முன்னாள் தவிசாளர், சாவகச்சேரி நகர சபை)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
சாவகச்சேரித் தொகுதிக் கிளையினர்



நம் ஊர் என்றும் தமிழ் அரசோடு

# சுண்டிக்குளத்தில் கேரள கஞ்சாவுடன் ஒருவர் சிக்கினார்!



கிளிநொச்சி – சுண்டிக்குளம் பகுதியில் கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் யாழ்ப்பாண முகாம் அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கிளிநொச்சி மணற்காடு பகுதியைச் சேர்ந்த 49 வயதுடையவர் ஆவார்.

சந்தேகநபரிடம் இருந்து 108 கிலோ 310 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலுதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஸ்ரீதலதா மாளிகை யாத்திரைக்கு சென்ற நால்வர் பரிதாப மரணம்!

கண்டி ஸ்ரீதலதா மாளிகை யாத்திரையில் கலந்துகொள்வதற்காகச் சென்று சுகயீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நான்கு பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்று கண்டி பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்கள் 69, 70, 74 மற்றும் 80 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் ஒருவர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார் என்று வைத்திய பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

ஏனைய மூவரின் உயிரிழப்புக்கான காரணங்கள் கண்டறிப்படவில்லை என்பதால் அவர்களின் உடல் பாகங்கள் தடயவியல் நோயியல் நிபுணரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில், கடந்த ஏழு நாட்களில் சுமார் 300 பேர் சுகயீனம் காரணமாகக் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானோர் நீரிழிவு மற்றும் வெப்பம் காரணமாக சுகயீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் ஆவர்.

ஸ்ரீதலதா மாளிகைக்கு அருகில் 9 சுகாதார மையங்கள் செயற்பட்டு வருகின்ற நிலையில், கடந்த சில நாட்களில் கிட்டத்தட்ட 3 ஆயிரம் பேர் அவற்றில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதேவேளை, ஸ்ரீதலதா மாளிகை யாத்திரையில் கலந்துகொள்ளும் யாத்திரிகர்கள் நோய்வாய்ப்பட்டால் அவர்களை வைத்தியசாலைக்கு அனுப்புவதற்காக 7 அம்பியூலன்ஸ்கள் ஸ்ரீதலதா மாளிகைக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# மலேரியா நாட்டிற்குள் பரவும் அபாய நிலை

## வைத்தியர் தயானந்தரூபன் எச்சரிக்கை




(பா.சதீசன்)

மலேரியாவை இலங்கையில் ஏற்படுத்தி விட கூடாது என்பதற்காக நாங்கள் அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருகின்றோம். அதற்கு மக்களது ஒத்துழைப்பும் அவசியம் தேவை என முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய மலேரியா தடை இயக்கத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் தயானந்தரூபன் தெரிவித்தார்.

மலேரியா தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கை நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மலேரியா தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற வகையில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றோம். அந்தவகையில் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் எமது ஊழியர்களால் இரத்ததானம் வழங்கப்பட்டிருந்தது. அதனை தொடர்ந்து இன்றையதினம் முல்லைத்தீவு மாவட்ட மலேரியா தடை இயக்கத்தை சேர்ந்த அனைத்து பணியாளர்களும் இணைந்து சிரமதானத்தையும் ,விழிப்புணர்வு நடவடிக்கையையும் முன்னெடுத்திருந்தோம்.

மக்களுக்கு மலேரியா தொடர்பான அறிவை விழிப்பூட்டலை ஏற்படுத்துவதற்காக இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருக்கின்றோம். பலருக்கு தெரிந்திருக்கும் ஆனால் இன்றைய தலைமுறையினருக்கு அவ்வளவு பரீட்சயமில்லாத ஒரு நோயாக மலேரியா காணப்படுகின்றது.

ஏனென்றால் 2002 ஆம் ஆண்டிற்கு பின்னர் இலங்கையில் மலேரியா நோயினை சுகாதார திணைக்களத்தினரின் கடும் முயற்சியினால் இல்லாது ஒழிக்கப்பட்டிருந்தது.

உள்நாட்டில் மலேரியா இல்லாத போதும் தற்போது மீண்டும் ஒரு மலேரியா எமது நாட்டிற்குள் வந்துவிடுகின்ற அபாய சூழ்நிலை காணப்படுகின்றது. எவ்வாறெனில் பல நாடுகளில் மலேரியா பரவலாக காணப்படுகிறது. குறிப்பாக ஆபிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற தெற்காசிய நாடுகள், தென்கிழக்காசிய நாடுகள் பல நாடுகளில் மலேரியா காணப்படுகின்றது. அவ்வாறான நாடுகளிற்கு சென்று வருபவர்கள் மூலம் எமது நாட்டிற்கு மலேரியா வந்தடைகின்றது.

இவ்வாறான நாடுகளிற்கு செல்ல இருப்பவர்கள் முன்கூட்டியே அதற்குரிய தடுப்பு மருந்துகளை பெற்று சென்றால் மலேரியா நோய் ஏற்படாது தடுக்க முடியும். மீண்டும் மலேரியா என்ற ஒரு நோயினை இலங்கையில் ஏற்படுத்தி விட கூடாது என்பதற்காக நாங்கள் அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருகின்றோம். அதற்கு மக்களது ஒத்துழைப்பும் அவசியம் தேவை. ஒத்துழைப்பு கிடைக்கின்ற பட்சத்தில் ஆபத்திலிருந்து விடுவித்து கொள்ள முடியும் என கூறிக்கொள்கின்றேன்.” என்றார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்கள் சக்தி அரசின் திட்டம். அதைக் கைவிட்டு விட்டதாக ஆளும் தரப்பு இன்னும் அறிவிக்கவேயில்லை.

அந்த அரசமைப்பு வரைவில் சொல்லப்பட்ட 'ஏக்கிய ராஜ்ய' என்று சொல்லின் அர்த்தம் குறித்து தெளிவாகவும் வெளிப்படையாகவும் அந்த வரைவிலேயே மூன்று மொழிகளிலும் விளக்கம் வேறு அளிக்கப்பட்டிருந்தது. அந்த அரசமைப்பு வரைவு முயற்சியில் பங்குதாரராக இருந்த தமிழரசுக் கட்சியின் தற்போதைய பதில் செயலாளர் சுமந்திரன் அண்மையில் கூட அது குறித்துத் தெளிவாக விளக்கம் அளித்திருந்தார்.

அந்தச் சொல்லாடலின் கருத்தை வேண்டுமென்றே பிழையான முறையில் அர்த்தப்படுத்தி தமிழரசுக்கு எதிரான காழ்ப்புணர்வான அரசியலை அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்னெடுத்து வருகிறார். அது பற்றிய தெளிவான விளக்கத்தை சுமந்திரனுக்கு மேலதிகமாக இன்றும் கூட அக்கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் இரத்தினவடிவேல் தந்திருக்கின்றார். அது பிறிதொரு பக்கத்தில் இன்று பிரசுரமாகியுள்ளது.

அப்படி இருக்க 'ஏக்கிய ராஜ்ய' என்ற சொல்லாடலுக்கு சிங்களப் பெயரோடு கஜேந்திரகுமார் நடத்தும் அபவாத அரசியல் பிரசாரத்திற்குத் துணை போவது போன்ற ஒரு நிலைப்பாட்டை எடுத்து நேற்று தம்பாட்டில் அறிவிப்பு கொடுத்திருக்கிறார் சி.வி.கே.சிவஞானம்.

கஜேந்திரகுமார் சொல்வது போல எந்தக் கட்டத்திலும் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட ஓர் ஏற்பாட்டுக்கு தமிழரசு இது வரை காலமும் இணங்கிப் போனதேயில்லை. 2015 - 2019 அரசமைப்பு ஏற்பாட்டு முயற்சியின் போதும் கூட. உண்மையில் கூறுவதானால் தமிழரசு அதன் ஸ்தாபக் காலம் முதல் சொல்லி வருகின்ற சமஷ்டிக் கோரிக்கைக்கு கீழ் இறங்குவதற்கு எச்சமயத்திலும் அது இணங்கியதே கிடையாது. கஜேந்திரகுமாரின் பேரன் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தான் தமிழரசின் சமஷ்டிக் கோரிக்கையை ஆரம்பம் தொட்டு மோசமாக விமர்சித்து கிண்டல் அடித்தவர். இப்போது அந்த சமஷ்டியை தாம் தனியாகச் சுமப்பவர் போல நடிக்கிறார் கஜேந்திரகுமார்.

தமிழரசு 2015 - 2019 காலப்பகுதியில் கூட்டமைப்பின் சகபாடிகளுடன் சேர்ந்து இணங்கி ஏற்படுத்திய ஏற்பாடு ஒற்றையாட்சிக்கு உட்பட்டதல்ல, அது சமஷ்டி என்று நேரடியாகப் பெயர் குறிப்பிடப்படாத சமஷ்டி கட்டமைப்புத்தான். அதை வலியுறுத்துவதை விட்டு, அந்த காலகட்டத்தில் தமிழரசு ஆதரித்த ஏற்பாடு ஒற்றையாட்சி என்பது போன்றதே எனும் ஒரு மயக்கக் கருத்து வரும் விதத்தில் சி.வி.கே.சிவஞானம் விளக்கம் அளிக்க முற்பட்டிருக்கிறார். இது குசும்பு வியாக்கியானம் செய்யும் கஜேந்திரகுமாரின் கருத்தை வலுப்படுத்தும் ஓர் ஏற்பாடு போலத் தோன்றுகின்றது.

தமிழரசு சமஷ்டிக்குக் குறைவாக எதையும் ஏற்கவே இல்லை என்ற சிவஞானத்தின் கருத்து சரியாயினும், 2015 - 2019 காலப்பகுதியில் அது இணங்கிய ஏற்பாடும் சமஷ்டிக்குக் குறைந்தது அல்ல என்பதை அடித்து வலியுறுத்துவதை விடுத்து, ஏதோ கஜேந்திரகுமார் சொல்வது போல அந்த ஏற்பாட்டை 'ஏக்கிய ராஜ்ய' என்ற சொல்லாடலில் ஒப்புக்கொண்டு அதனை ஒற்றையாட்சி முறைமை என்று காட்டுவது போன்ற ஒரு மயக்கத்தை சி.வி.கே.சிவஞானத்தின் விளக்கம் தந்து நிற்கின்றது.

2015 - 2019 காலப்பகுதியில் அந்த முயற்சியில் தமிழரசு கட்சி தலைவர்கள் மும்முரமாக இருந்தபோது சி.வி.கே.சிவஞானம் வடக்கு மாகாண சபையின் அவை தலைவராக 'பிஸி'யாக இருந்திருப்பார் போலும்! அதனால் அந்த முயற்சியின் ஏற்பாடு பற்றி அவருக்கு தெரியவும் தெரியவில்லையோ என்னவோ...!ஆயினும் அண்மையில் மிகத் துல்லியமாக - மிக வெளிப்படையாக - அதனை மீண்டும் தெளிவுபடுத்தியிருந்தார் சுமந்திரன். அதை செவிமடுத்து இருந்தால் (சுமந்திரனின் குரலிலேயே அது காலைமுரசில் - கடந்த 15 ஆம் திகதி தெளிவாக விளக்கத்தோடு இணைக்கப்பட்டிருந்தது. அதை சரியாக வாசித்திருந்தால் அல்லது சுமந்திரனின் குரலில் கேட்டிருந்தால்) சிவஞானத்துக்கு அது புரிந்திருக்கும். நேற்று அவர் கொடுத்த பேட்டி அப்படி வந்திருக்காது என்று நினைக்கிறேன். அதனால் சுமந்திரனின் அந்தச் செவ்வி அடங்கிய இணைப்பைக் கீழே தந்துள்ளேன். விரும்புவோர் அதை அழுத்தி அந்த நான்கரை நிமிட விளக்கத்தை மீண்டும் ஒரு தடவை செவிமடுக்கலாம்.

"2015 - 2019 இல் எமது தமிழரசு கட்சி அப்போதைய நல்லாட்சி அரசோடு புதிய அரசமைப்பு நகல் ஏற்பாட்டுக்கு இணங்கிப் போனது. அது சமஷ்டிக்குக் குறைவான ஏற்பாடு அல்ல. அந்த முயற்சிக்கு இணங்கியதன் மூலம் சமஷ்டியை தமிழரசு விட்டுக் கொடுத்து விடவில்லை. 'ஏக்கிய ராஜ்ய' என்று சமஷ்டிக்குக் குறைவான எந்த ஏற்பாட்டுக்கும் தமிழரசு இணங்கவே இல்லை, இனியும் இணங்காது" என்பதை கொள்கைரீதியாகஒப்புக்கொண்டுஅடித்து உரைக்க தேவையான முதுகெலும்பு தமிழரசின் பதில் தலைவருக்கு இல்லாமல் போனது ஏன் என்று விளங்கவில்லை.




## மோடியுடன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உலகில் எங்கு இடம்பெற்றாலும், பயங்கரவாதத்தைத் தான் வன்மையாகக் கண்டிப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்தக் கொடூரமான பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் இலங்கை அரசு மற்றும் மக்களின் இரங்கலைத் தெரிவித்துக்கொண்ட ஜனாதிபதி, காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும் பிரார்த்தித்தார்.

மேலும், எழுந்துள்ள நிலைமையால் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலை விரைவில் தீர்க்கப்பட்டு பிராந்திய அமைதி நிலைநாட்டப்படும் என்பது இலங்கையின் எதிர்பார்ப்பாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## இலஞ்ச, ஊழல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிழமை காலை 9.30 மணியளவில் இலஞ்ச, ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் முன்னிலையாவார் என அவரது சட்டத்தரணி இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுக்கு அறிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டில் ஊவா மாகாண முதலமைச்சராக சாமர சம்பத் தசநாயக்க கடமையாற்றியபோது பாடசாலை மாணவர்களுக்குப் புத்தகப்பை வழங்குவதற்காக மாகாண சபை ஊடாக வங்கியிலிருந்து 10 இலட்சம் ரூபாவை காசோலையாகப் பெற்று அதனைப் பணமாக மாற்றி தனிப்பட்ட தேவைக்காகப் பயன்படுத்தி ஊழலில் ஈடுபட்டமை தொடர்பில் இலஞ்ச, ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், ரணில் விக்கிரமசிங்க கடந்த 10 ஆம் திகதி சாமர சம்பத் தசநாயக்கவின் ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவதற்காக ஏப்ரல் 17 ஆம் திகதி இலஞ்ச, ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டது.

ஆனால், சித்திரைப் புத்தாண்டு காரணமாக ஏப்ரல் 17 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க இலஞ்ச, ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் ஆஜராகவில்லை.

இதனையடுத்து, நேற்று 25ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இலஞ்ச, ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டும் அழைப்பாணை விடுக்கப்பட்டது.

ஆனால், தனது சட்டத்தரணி வெளிநாடு சென்றுள்ளதால் அவர் நாடு திரும்பிய பின்னர் இலஞ்ச, ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் ஆஜராகுவேன் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ரணில் விக்கிரமசிங்க நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் ஆஜராகுவார் என அவரது சட்டத்தரணி இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வறுமையின் அபாயம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனினும் நாட்டில் வறுமையின் அபாயம் மீண்டும் அதிகரித்து வருவதாகவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் பொருளாதாரம் ஒரு நிலையான தன்மையைப் பெற்றிருந்தாலும், நாட்டில் வறுமை அல்லது வங்குரோத்து நிலை அதிகரித்துள்ளதாகவும் உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது .



# உணவகங்கள் மீது திடீர் பரிசோதனை நடவடிக்கை; மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உணவுகள் அழிப்பு

(பா.சதீசன்)

மாங்குளம் மற்றும் திருமுறிகண்டியிலும் உள்ள உணவகங்கள் மீது திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாங்குளம் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் உள்ள ஏ9 வீதி, மாங்குளம் மற்றும் திருமுறிகண்டியில் உள்ள உணவகங்களில் திடீர் பரிசோதனை நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தது.

ஒட்டுசுட்டான் வைத்திய அதிகாரிகளான வைத்தியர் பகீரதன், வைத்தியர் சஞ்சீவன் ஆகியோர்களின் தலைமையில் பொதுச்சுகாதார பரிசோதகர்களான நதிருசன், லோஜிதன், டிலக்சன் ஆகியோர்களினால் மேற்கொள்ளப்பட்ட இந்த பரிசோதனை நடவடிக்கையில்.

சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகங்கள் மூடப்பட்டதுடன் மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உணவுகள் அழிக்கப்பட்டன.

அத்தோடு சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய சில உணவகங்களுக்கெதிரா கட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டதுடன், மூடப்பட்ட உணவகங்களின் குறைபாடுகள் நிவர்த்தி செய்ய

10 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாமல் போனால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுச்சுகாதார பரிசோதகர்களினால் எச்சரிக்கப்பட்டிருந்தது.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## முக்கிய குழுவின் வருகை

இலங்கையில் இருந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு விசேட வரிச்சலுகை வழங்கும் ஜி.எஸ்.பி. பிளஸ் முறைமை குறித்து கண்காணிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்மட்ட குழுநாளைமறுதினம்28ஆம்திகதி முதல் மே 7 ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் செய்கின்றது.

ஒரு வகையில் இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உதவி வரும் இந்தச்சலுகைத் திட்டத்தின் எதிர்காலம் குறித்து முடிவெடுக்கும் முக்கிய நடவடிக்கையாக இந்த விஜயம் அமைகிறது.

ஜி.எஸ்.பி. பிளஸ் பொதுவான முன்னுரிமைத் திட்டத்தின் வர்த்தக சலுகைகளை பெறுவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதில் இலங்கை காட்டி உள்ள முன்னேற்றங்களை நேரடியாக மதிப்பீடு செய்வதே இந்தக் குழுவின் பயண நோக்கமாகும்.

இந்தக் குழுவின் வருகை, ஐரோப்பிய ஒன்றியத்தின் வழக்கமான இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படுகின்றகண்காணிப்புசெயல்முறையின் ஒரு பகுதி என்றாலும், இந்தத் தடவை இந்த விஷயம் மிக முக்கியத்துவம் பெறுகிறது.

இலங்கைக்கு வழங்கப்பட்ட இந்தச் சலுகைக் காலம் அடுத்த வருடத்துடன் முடிவடைய இருக்கையில், அதனை நீடிக்க வேண்டும் என்று இலங்கை மன்றாடுகிறது. இலங்கை, தான் எதிர்கொள்ளும்பொருளாதாரநெருக்குவாரத்தைச் சமாளிப்பதற்கு இந்த வரிச் சலுகை மிக மிக அத்தியாவசியம் என்ற இக்கட்டில் இருக்கின்றது.

ஆகையினால், மேற்படி ஐரோப்பிய ஒன்றியத்தின் வரிச்சலுகையைத் தொடர்ந்து பெறுவதற்காக, ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள நிபந்தனைகளை மேலும் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கைத் தரப்பு உறுதியளித்துள்ளது. ஆயினும் வாய்மூலமாகவும், எழுத்திலும் இலங்கை வழங்கிய பல நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், இந்த வரிச் சலுகை தொடர்ந்து கிடைக்குமா என்பது கேள்விக்குறி என அவதானிகள் சுட்டுகின்றனர்.


ஐரோப்பிய ஒன்றியக் குழு இங்கு தங்கியிருக்கும் காலத்தில், அரசாங்க அதிகாரிகள், தொடர்புடைய நிறுவனங்கள், அரசியல்வாதிகள், சிவில் சமூக அமைப்புக்கள், வணிக சங்கங்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் உட்பட பல்வேறு பங்குதாரர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடவிருக்கின்றது.

மேற்படி ஐரோப்பிய ஒன்றியத்தின் திட்டங்கள் மூலம் பயனடையும் 8 நடுத்தர வருமான நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை மாற்றம் மற்றும் நல்லாட்சி ஆகியவற்றை உள்ளடக்கிய 27 சர்வதேச மரபுகளை அங்கீகரித்துத் திறம்பட நடைமுறைப்படுத்துவது இந்த வரிச்சலுகை பெறும் நாட்டின் தகுதிக்கு அடிப்படையாக ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ளது.

27 உறுப்பினர்களையும் 45 கோடி நுகர்வோரின் சந்தையையும் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம், இலங்கையைப் பொறுத்தவரை அதன் இரண்டாவது பெரிய ஏற்றுமதி இடமாகும். கடந்த ஆண்டில் 270 கோடி யூரோ பொருள்களை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இலங்கை ஏற்றுமதி செய்திருந்தது. இந்தப் பொருள்களில் சுமார் 85 வீதமானவை ஐரோப்பிய ஒன்றிய சந்தையில் வரியில்லாமல் நுழைகின்றன என்பது குறிப்பிடத்தக்க விடயம்.

இந்தச் சலுகையை இலங்கை தக்க வைக்குமா? ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவின்வருகைஅதனைமுடிவு செய்யும்





# இஸ்ரோ முன்னாள் தலைவர் கஸ்தூரி ரங்கன் மறைவு

## பிரதமர் மோடி இரங்கல்

இந்தியாவின் மூத்த விண்வெளி விஞ்ஞானியும், இஸ்ரோ முன்னாள் தலைவருமான கஸ்தூரி ரங்கன் மறைவுக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பிரதமர் மோடி வெளியிட்ட இரங்கல் பதிவில், “இந்தியாவின் அறிவியல் மற்றும் கல்விப் பயணத்தில் மிகவும் போற்றத்தக்கவராகத் திகழ்ந்த டாக்டர் கி.கஸ்தூரி ரங்கனின் மறைவுக்கு மிகவும் வருத்தமடைகிறேன். தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய அவரது தலைமைப் பண்பு மற்றும் தேசத்துக்கான தன்னலமற்ற சேவை மக்களால் என்றென்றும் நினைவில் கொள்ளப்படும்.

இஸ்ரோவில் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றிய அவர், இந்தியாவின் விண்வெளித் திட்டத்தை விடாமுயற்சியுடன் புதிய உச்சத்துக்கு கொண்டு சென்றார். இது நாட்டுக்கு உலகளாவிய அங்கீகாரம் கிடைக்க வழிவகுத்து. அவரது சீரிய தலைமைப் பண்பு நாட்டின் லட்சியமான செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தப்படுவதை செயலாக்கியது.

தேசிய கல்விக் கொள்கையை உருவாக்குவதில் டாக்டர் கஸ்தூரி ரங்கன் மேற்கொண்ட முயற்சிகளுக்கும், இந்தியாவில் கற்றல் முறையை முழுமையானதாகவும், தற்போதைய தேவைகளை பூர்த்தி செய்வதை உறுதி செய்யும் வகையில் அமைந்துள்ளதற்காக நாடு என்றென்றும் அவருக்கு நன்றியுடன் இருக்கும். பல இளம் விஞ்ஞானிகளுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் சிறந்த வழிகாட்டியாகவும் டாக்டர் கி. கஸ்தூரி ரங்கன் திகழ்ந்தார். எனது எண்ணங்கள் அவரது குடும்பத்தினர், மாணவர்கள், விஞ்ஞானிகள் மற்றும் எண்ணற்ற அபிமானிகளுடன் உள்ளன.” என்று குறிப்பிட்டுள்ளார்.



# பஹல்காம் தாக்குதலில் தொடர்புடைய பயங்கரவாதிகளின் வீடுகள் அழிப்பு

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் தொடர்புடைய 2 லஷ்கர் பயங்கரவாதிகளின் வீடுகளை இந்திய பாதுகாப்புப் படையினர் குண்டுவீசி அழித்துள்ளனர். அந்த வீடுகளுக்குள் வெடிபொருள்கள் வைக்கப்பட்டிருந்தன என தெரிவிக்கப்படுகிறது.

காஷ்மீரின் பஹல்காம் மலைப் பகுதியில் உள்ள பைசரன் பள்ளத்தாக்கு பகுதியில் சுற்றுலா பயணிகள் மீது பயங்கரவாதிகள் கடந்த 22ஆம் திகதி தாக்குதல் நடத்தினர். இதில் வெளிநாட்டினர் உட்பட 26 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு லஷ்கர்-இ-தொய்பா ஆதரவு அமைப்பான டி.ஆர்.எப். பொறுப் பேற்றது.

இந்நிலையில், இந்த தாக்குதலில் தொடர்புடைய லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாதிகளான அடில் உசேன் தோக்கர் மற்றும் ஆசிப் ஷேக் ஆகிய இருவரின் வீடுகள் ஜம்மு காஷ்மீரில் நடந்த தனித்தனி குண்டுவெடிப்புகளில் கடந்த வியாழக்கிழமை இரவு அழிக்கப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அவர்களின் வீடுகளுக்குள் வெடி பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன எனவும் கூறப்படுகிறது.

அடில் உசேன் தோக்கர் அனந்த்நாக் மாவட்டத்தையும், ஆசிப் ஷேக் புல்வாமாவையும் சேர்ந்தவர்கள். ஹாஷிம் மூசா என்கிற சுலேமான் மற்றும் அலி பாய் என்கிற தல்ஹா பாய் ஆகியோர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் குறித்து தகவல் கொடுப்பவர்களுக்கு 20 லட்சம் ரூபா பரிசு வழங்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# பயங்கரவாதத்துக்கு எதிராக ஒன்றுபட்டு நிற்பது முக்கியம்

## ஸ்ரீநகரில் ராகுல் காந்தி வலியுறுத்தல்

காஷ்மீரின் பஹல்காமில் பங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் காயம் அடைந்தவர்களை மக்களவை எதிர்க்கட்சிகள் தலைவர் ராகுல் காந்தி நேற்று வெள்ளிக்கிழமை சந்தித்து ஆறுதல் கூறினார். அத்துடன், ஜம்மு காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லாவை அவரது இல்லத்தில் ராகுல் காந்தி சந்தித்துப் பேசினார்.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமின் பைசரன் புல்வெளியில் கடந்த செவ்வாய்க்கிழமை பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டனர். இந்த நிலையில், மக்களவை எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி நேற்று ஸ்ரீநகர் சென்று பாதிக்கப்பட்டவர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில்,

“இது ஒரு பயங்கரமான சோகம். என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ளவும், உதவி செய்வதற்காகவும் நான் இங்கே வந்துள்ளேன். ஒட்டுமொத்த ஜம்மு காஷ்மீர் மக்களும் இந்த தாக்குதலைக் கண்டித்ததுடன், இந்த நேரத்தில் தேசத்துடன் ஒற்றுமையாக நின்றுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த ஒருவரை நான் இன்று சந்தித்தேன். இந்தத் தாக்குதலில் தங்களின் குடும்பத்தினரை இழந்தவர்களுக்கு எனது அன்பினையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். முழு தேசமும் ஒற்றுமையாக நிற்கிறது. நேற்று அரசுடன் நாங்கள் ஒரு கூட்டம் நடத்தினோம். அரசு என்ன நடவடிக்கை எடுத்தாலும், அதற்கு ஆதரவளிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். சமூகத்தை பிளவுபடுத்துவதே இந்தத் தாக்குதலுக்கு பின்னுள்ள ஒரே நோக்கம். பயங்கரவாதிகள் நடத்த விரும்பியதை தோற்கடிப்பதற்கு நாம் அனைவரும் ஒற்றுமையாக நிற்பது மிகவும் முக்கியம்.

ஜம்மு காஷ்மீர் மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் உள்ள எனது சகோதர சகோதரிகளை, யாரோ சிலர் தாக்குவதைப் பார்ப்பது வேதனை அளிக்கிறது. நாம் அனைவரும் ஒற்றுமையாக நிற்பது மிகவும் முக்கியம் என்று நான் கருதுகிறேன். இந்த தீயச் செயல்களுக்கு எதிராக போராடுவதும், பயங்கரவாதத்தை முற்றிலும் தோற்கடிப்பதும் மிகவும் முக்கியம். நான் முதல்வர் உமர் அப்துல்லாவையும், துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹாவையும் சந்தித்தேன் அவர்கள் என்ன நடந்தது என்று எனக்கு விளக்கினார்கள். நானும் எனது கட்சியும் முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்று இருவரிடமும் உறுதி அளித்திருக்கிறேன்.” என்றார்.



## காரில் வெடிப்பு சம்பவம்:

# ரஷ்ய இராணுவத்தின் உயர் அதிகாரி பலி!



ரஷ்யா – மொஸ்கோவில் இடம்பெற்ற


வெடிப்பு சம்பவத்தில் ரஷ்ய இராணுவத்தின் உயர் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மொஸ்கோவின் பாலாஷிகா நகரில் கார் ஒன்றில் இந்த வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

காரில் வைக்கப்பட்டிருந்த வெடிபொருள் தொலைவிலிருந்து இயக்கப்படும் கருவி மூலம் வெடிக்கவைக்கப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வெடிப்பு சம்பவம் இடம்பெற்ற பகுதியில் கார் தீப்பற்றி எரிவதைக் காண்பிக்கும் புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

இந்த தாக்குதலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.





### அமெரிக்கா - சீனா வர்த்தக போர் எதிரொலி:

# இந்தியா செல்லும் ஆப்பிள் நிறுவனம்!

அமெரிக்காவில் விற்பனையாகும் அனைத்து ஐஃபோன்களையும் இந்தியாவில் தயாரிக்க ஆப்பிள் நிறுவனம் திட்டமிட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தற்போது அமெரிக்காவில் விற்பனையாகும் ஐஃபோன்கள் சீனாவில் தயாரிக்கப்பட்டவை.

சீனாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையே ஏற்பட்டுள்ள வர்த்தக போர் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி ஐஃபோன்கள் தயாரிக்கும் பணிகளை சீனாவில் இருந்து இந்தியாவுக்குக் கொண்டு செல்வதற்கு ஆப்பிள் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தால்வருடாந்தம்60மில்லியன்ஐஃபோன்கள் இந்தியாவில் தயாராகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அமெரிக்காவுடனான வரி விதிப்பு பேச்சுவார்த்தைக்கு சீனா மறுப்பு




அமெரிக்காவுடனான வரி விதிப்பு தொடர்பான பேச்சுவார்த்தையில் ஈடுபட சீனா மறுப்பு தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீனா மீதான அமெரிக்காவின் வரி சர்வதேச அளவில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

இதனால், நிலைமையை சரி செய்ய பேச்சுவார்த்தையை தொடங்க ட்ரம்ப் முன்வந்திருக்கிறார். எனினும், வரியை குறைத்தால் மட்டுமே பேச்சுவார்த்தை என சீனா உறுதியாக கூறியிருக்கிறது.

அண்மையில், இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சீனாவுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது என்று கூறியுள்ளார்.

இது தொடர்பில் சீன வெளியுறவுத் துறை தெரிவிக்கையில்,

“வரி விதிப்பு பற்றி எந்த பேச்சுவார்த்தையும் நடக்கவில்லை.

பூனைக்கு மணியை கட்டியவர்கள் தான் அதை அவிழ்க்க வேண்டும்.

பேச்சுவார்த்தை நடக்க வேண்டும் எனில் முதலில் வரியை குறைக்க வேண்டும். அதற்கு பின்னர்தான் பேச்சுவார்த்தையே தொடங்கும். ” என்று தெரிவித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு இடையிலான வர்த்தக போர் சர்வதேச அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், தற்போது சீனாவின் நிபந்தனைக்கு ட்ரம்பின் நிலைப்பாட்டை மூன்றாம் தரப்பு நாடுகள் எதிர்பார்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மலேரியா பரவும் அபாயம்:

# விழிப்புணர்வை முன்னெடுத்த மலேரியா தடை இயக்கத்தினர்

(பா.சதீசன்)

இலங்கையில் மீண்டும் மலேரியா பரவும் அபாயம் உள்ளமையை தெளிவுபடுத்துவதற்கான மாபெரும் சிரமதான விழிப்புணர்வு நிகழ்வு புதுக்குடியிருப்பில் இடம்பெற்றுள்ளது.

ஏப்ரல் 25 மலேரியா தினத்தினை முன்னிட்டு விழிப்புணர்வு முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய மலேரியா தடை இயக்கத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் தயானந்தறூபன் தலைமையில் புதுக்குடியிருப்பு நகர்பகுதியில் மலேரியா தடுப்பு இயக்கத்தின் ஊழியர்களால் சிரமதானப்பணி நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அத்துடன், இந்த சிரமதான பணி மூலம் புதுக்குடியிருப்பு நகரை சுத்தப்படுத்தியதோடு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வர்த்தகர்கள், பயணிகள், பாடசாலை மாணவர்கள் என பலருக்கும் விழிப்புணர்வு துண்டுபிரசுரமும் வழங்கப்பட்டிருந்தது.










# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்








## கொலைகள்தான் தாராளமாக நடக்கின்றன

# கையாலாகாத அரசை தோற்கடிக்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

"சுப நேரத்தில் நாட்டை அநுரவுக்கு கொடுத்து, வளமான நாட்டையும், அழகான வாழ்க்கையையும் மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு வாக்குறுதியளித்த வளமான நாடும், அழகான வாழ்வும் இன்று இல்லை. குண்டர்கள், கொள்ளையர்கள் மற்றும் கொலைகாரர்களின் பிடியில் சமூகம் சிக்கியுள்ளது. மிருகத்தனமும் வன்முறையும் பரவியுள்ளது."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மாவத்தகம பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேசிய பாதுகாப்பு குறித்து மேலதிக வகுப்புகள் எடுக்கின்றோம். வாருங்கள் எனக் கூறி பெருமையடித்த இந்த அரசு, இன்று பாதுகாப்பு குறித்து டியூஷன் வகுப்புக்கு செல்ல வேண்டிய நிலைக்கு வந்துள்ளது.

சமகாலத்தில் பல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், கொலைகள், உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன. வீடுகள், வீதிகள், பணியிடங்கள் பாதுகாப்பற்று காணப்படுகின்றன.

இன்று பொதுமக்களுக்கு பாதுகாப்பு இல்லை. வளமான நாடு அழகான வாழ்க்கை என்ற கொள்கைப் பத்திரம் வாக்குறுதிகளை மீறும் நாடகமாக மாறியுள்ளது.

பொருட்களின் விலைகள், எரிபொருள் விலைகள், மின்சாரக் கட்டணம், வற் மற்றும் பிற வரிகளைக் குறைப்பதாக வாக்குறுதி வழங்கினர்.

அந்த வாக்குறுதிகள் இன்னும் சரியாக நிறைவேற்றப்படவில்லை. இந்த ஆளுந்தரப்பினர் ஒலிவாங்கியை எடுத்துக்கொண்டு பச்சைப் பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றி, அவஸ்தைப்படுத்தி வருகின்றனர்.

வரவு – செலவு திட்டத்தில் கூட இல்லாத விடயங்களைக் கூறி மக்களை ஏமாற்றி வருகின்றனர். பொய்களைக் கூறி நாட்டை ஏமாற்றும் இந்த கையாலாகாத அரசைத் தோற்கடிக்க வேண்டும்." – என்றார்.




இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.



ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

6



ஜனாதிபதித் தேர்தல் வேட்புமனுத் தாக்கல் சமயம் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ், சட்டத்தரணி எல்.எச்.டி சில்வா, றோஹண விஜயவீர ஆகியோர்.

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

நேற்றைய பகுதியில் இந்த சித்தாந்தங்களைத் தள்ளி வைத்துவிட்டு, 1977 ஆம் ஆண்டு ஜே.வி.பியினால் கொள்கைப் பிரகடனம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது என்று குறிப்பிட்டு இருந்தேன்.

அந்தக் காலகட்டம் முக்கியமானது. தமிழ்த் தேசியம் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தினால் வடிவமைக்கப்பட்டு, தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்ப் பிரதேசங்களில் பெரு வெற்றியீட்டி இருந்தது. சிறையில் இருந்த ஜே.வி பியின் அங்கத்தினர்கள் விஜயவீர, லயனல் போபகே உட்பட, அப்பொழுதுதான் ஜே.ஆரால் விடுதலை செய்யப்பட்டிருந்தார்கள்.

அவர்களது அரசியல் பாதை பலம் பெற வேண்டும், நாட்டின் உண்மையான விடுதலை அவர்கள் பார்வையில் சிங்கள தேசியத்தின் விமோசனம், முதலாளித்துவ தத்துவங்களில் அதுவரை அரசு செய்த ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சி போன்றவற்றைப் பின்தள்ளி முன்னேற உடனடியாக ஜே.ஆரின் அரசாங்கத்தோடு மல்லுக்கட்ட வேண்டி இருந்தது. அதே நிலையில்தான் தமிழ்த் தேசியமும் அரசுடன் போராட வேண்டி இருந்தது.

ஆக, இந்த இரு தேசியங்களுக்கும் இடையில் இருந்த ஒற்றுமை அவர்கள் அந்தக் காலத்தில் தங்களுக்குள் ஒன்றோடு ஒன்று போட்டியிடவில்லை. ஒரு வழியில் எதிர்க்கக் கூட இல்லை.

தாங்கள் புரிந்து கொண்ட மார்க்ஸீய – லெனினிஸ தத்துவங்களில் எவ்வித அடிப்படைகளில் தமிழ்த் தேசியம் கோரி நிற்கும் இறைமையுள்ள தமிழீழக் கொள்கைகளை அணுகுவது என்பது ஜே.வி.பி. கருத்தாக்கங்களின் வேறுபாடுகளாக அமைந்தன. அந்த தத்துவங்களின் இரண்டு முக்கிய துருவங்களாக லயனல் போபகேயும் விஜயவீரவும் இருந்தனர்.

ஜே.வி.பியின் மத்திய குழுவில் இந்த சித்தாந்தங்கள் ஆழமாக விவாதிக்கப்பட்டாலும், முடிவில் மேற்கொள்ளப்பட்ட பிரகடனத்தின் கருத்துக்கள் 14,24,25,34,39,40 ஆகியன தேசிய பிரச்சினையை கோடி காட்டினவே ஒழிய, ஏற்பட்ட சமரசங்களில் தொடரும் பிரிவினைவாதத்தைப் பற்றி சுருக்கமாக பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

தொடர்ச்சி ▾

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

ஆ அதிகாரங்கள் எதேச்சாரமாக மையப்படுத்தப்படுவதும், நாடு பிரிக்கப்படுவதும் எதிர்க்கப்படும்.

ஆ நாட்டின் இறையாண்மை, நாட்டிலுள்ள எல்லா சிறுபான்மையினரும் உண்மையான சமத்துவ அடிப்படையில் தங்களைத் தாங்களே ஆளும் உரிமையை கொண்டிருப்பதிலேயே பாதுகாக்க முடியும்.

இந்தப் பிரகடனத்தை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு சிறுபான்மையினருக்கு சமத்துவமும் தங்களை தாங்களே ஆளும் அதிகாரமும் இருந்தால்தான் நாட்டின் ஒட்டுமொத்த இறைமையைப் பாதுகாக்கலாம் என்ற பரந்த மனப்பான்மையில் பார்க்கலாம். லயனல் போபகே, பின்னர் தந்த செவ்விகளிலும், அவரது கட்டுரைகளிலும் மத்திய குழு, கொள்கை நிச்சயமற்ற பிரகடனம் ஜே.வி.பியினருக்கு அவர்களது தேர்தல் பிரசாரங்களில் கை கொடுத்தது மட்டுமல்லாமல், கட்சியின் வளர்ச்சிப் பாதைகளில் கருத்து வேற்றுமைகளையும் தோற்றுவித்தது.

லயனல் போபகேயும் அவரது ஆதரவாளர்களும் எடுக்கப்பட்ட 1977 ஆம் ஆண்டின் தீர்மானங்களின் அடிப்படைகளில் நாடு முழுவதிலும் எல்லா கிராமங்களிலும் அடிமட்ட அணுகு முறையில் அங்கத்தினர்களைத் திரட்ட வேண்டும் எனக் கருதினர். ஆனால் விஜயவீரவும் அவரது ஆதரவாளர்களும் விமரிசையான பொதுக்கூட்டங்களால் இளைஞர்களைக் கவர வேண்டும் என்று அப்படியான பொதுக்கூட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

அவர்களது மே தினக் கூட்டங்களுக்கும் மற்றைய



லயனல் போபகேயின் திருமணப் பதிவு. அருகில் றோஹண விஜயவீர மற்றும் சுன்னாகத்தை சேர்ந்தவரான இராஜகுலசூரியர் சிங்கமாப்பாணர்.

யளவில் தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டாலும், பிரிவினை கோரப்பட்ட காலங்களில் அது வித்தியாசமான விளக்கங்களை அரச மட்டத்தில் கூட, பிரிவினையை ஆதரிப்பதாகக் கருதப்படலாம் என்பதால் அந்த விதத்தில் அது வடிவமைக்கப்பட்டது என விளக்கம் தந்தார்.

அவரது விளக்கத்தில் தமிழ் மக்கள் தங்களது சுயநிர்ணய உரிமையில் சிங்கள மக்களோடு இணைவான ஓர் அமைப்பில் வாழலாம். ஆனால், அது பிரிந்து போகும் உரிமையாக விளங்கிக் கொள்ளக் கூடாது என்பதே.

இன்னொரு விதத்தில் ஜே.வி.பியின் கொள்கையாக நாடு எந்த ரீதியிலும் பிரிக்கப்படுவது ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது என்ற கடும் போக்காகவும் கொள்ளலாம்.

1977-இல் இந்த இரட்டைப் போக்கு கொண்ட அணி வகுப்புகளுக்கும் திரண்ட மக்கள் கூட்டத்தை நம்பி விஜயவீர மக்கள் தன்னுடனே இருக்கிறார்கள் என்று அபிப்பிராயத்தில், மேற்கொண்டு திட்டங்களை வகுத்து, 1982 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. சார்பில் போட்டியிட்டார்.

இந்தத் தேர்தலில் விஜய்வீர போட்டியிட்ட போது அவர் தமிழர்களுக்கான ஆதரவு நிலைப்பாட்டை, 1977 ஆம் ஆண்டுப் பிரகடனத்தின் அடிப்படையில் கூட எடுக்கவில்லை. ஏனெனில் அப்படிச் செய்வது அரசியல் தற்கொலைக்கு ஒப்பாகும் என அவர் கருதினார்.

விஜயவீரவின் இந்த இரட்டை வேடமும், கட்சியை விரிவுபடுத்துவதற்கான அமைப்புக்களில் தமிழர் பிரதேசங்களுக்கு எவ்வித தனித்துவ பங்குகள் இல்லாமல் நாட்டை ஐந்து பிரிவுகளாக வகுத்த

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

மையும் கசப்புணர்வுகளை ஏற்படுத்தின.

மேற்கும் சப்ரகமுவாவும் – ஒன்று. இரண்டாவதாக – மத்திய மாகாணம். மூன்றாவது – ரஜரட்ட. நான்காவதாக– ஊவா, கிழக்குப் பகுதிகள். ஐந்தாவது – தென்மாகாணம். இப்படி நாடு கட்சி அமைப்புகளுக்காகப் பிரிக்கப்பட்டது.

விஜயவீரவின் தலைமை, தேர்தல் அரசியலுக்காக தேசியப் பிரச்சினை பற்றி மத்திய குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தை ஒட்டிய நிலைப்பாட்டையும் எடுக்காமல், தாங்கள் பதவிக்கு வந்தால் இனப்பிரச்சினையை யாவரும் ஏற்கும் வடிவத்தில் தீர்ப்போம் என்று மட்டும் அறிவித்துக் கொண்டிருந்தது. இது எந்த விதத்தில், யாவரும் ஏற்கும் வகையில், எப்படி நடைமுறைப்படுத்தப்படும் என்பதற்கு எந்தவித திட்டங்களும் இருக்கவில்லை.

இதனைப் போன்ற பிரசாரங்களையே, ஜனாதிபதி அநுரா நாடாளுமன்றத் தேர்தல் காலங்களில் மேற்கொண்டமையைப் பார்க்கலாம். இனப் பிரச்சினைக்கு எந்தவிதமான தெளிவான திட்டங்களை தேசிய மக்கள் சக்தி கொண்டுள்ளது என்பது பற்றியோ, எந்த விதமான அதிகாரப் பரவல், எந்த மட்டத்தில் பகிரப்படும் என்றோ, அன்றில் ஜே.வி.பி. கட்சியினர் தாங்கள் எப்பொழுதுமே விடாப்பிடியாக கூறி வந்த ஒற்றையாட்சியின் அதிகாரங்களில் எந்த வித அங்கங்கள் தளர்த்தப்படும் என்றோ ஏதும் கூறாமல் மௌனமே காக்கப்படுகின்றது. ஆயினும் தங்கள் பதவிக் காலத்தில் புதிய அரசமைப்பின் மூலம் இனப் பிரச்சினைக்கு யாவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு காணப்படும் என்ற பாடலே மீண்டும் மீண்டும் ஒலிபரப்பாகிறது.

1982 தேர்தல் முடிவுகளின் பின் ஜே.வி.பியினர் தங்கள் கட்சியின் பெறுபேறுகள் பற்றி ஆழமாக விவாதித்தனர். வடக்கு, கிழக்கில் விஜயவீரவுக்குக் கணிசமான வாக்குகள் கிடைக்கவில்லை. அது மட்டுமல்ல, தமிழ் மக்கள் கணிசமான அளவில் வாழும் கொழும்பு நகர்ப்புறங்களிலும், மலையகத்திலும் கூட அவர்களுக்கு வாக்குகள் கிட்டவில்லை. தாங்கள் எத்தனையோ விடயங்களைத் தெளிவாகவும் மக்களுக்கு நம்பிக்கை தரும் விதத்திலும் வைக்கவில்லை, அதில் தமிழ் மக்களது அபிலாசைகளும் இனப்பிரச்சினையும் ஒன்று என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இவை புரிந்து கொள்ளப்பட்டாலும், விஜயவீரவும் அவர்களது ஆதரவாளர்களும் மலையகத்தவர்களும் தமிழ் மக்களும் தங்களை ஆதரிக்காதமையை ஒட்டி எரிச்சல் அடைந்திருந்தாலும், தமிழரது அபிலாசைகள், அதனால் முறுகும் இனப்பிரச்சினை பற்றி நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தெளிவான கொள்கை இருக்க வேண்டும் என ஏப்ரல், ஜூன் 1983 காலங்களில் பல சுற்றுக் கூட்டங்களும் சம்மேளனங்களும் நடத்தினார்கள். அப்பொழுது ஆக்கப்படும் கொள்கை ஜே.வி.பி. கட்சியை பொறுத்த வரையில் பெருந்தூரம் பயணிக்க வேண்டிய அரசியல் பாதைக்கு பலமான அத்திவாரத்தை தருமென வேண்டிக் கருமங்கள் ஆற்றப்பட்டன.

(தொடரும்)



# அநுரவின் வருகையை முன்னிட்டு பொலிஸார் கோரிய தடையுத்தரவை வழங்க மறித்தது வவுனியா நீதிமன்றம்

(கி.வசந்தன்)

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவின் வருகையை முன்னிட்டு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ள தடையுத்தரவு கோரிய வவுனியா பொலிஸாரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா இன்று மாலை 4 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்திற்கு வருகை தரவுள்ள நிலையில் அங்கு பல ஆயிரக்கணக்கில் மக்கள் கூடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்க பிரதிநிதிகளால் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர் எனவும், அவ்வாறு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றால் அமைதிக்கு பங்கம் ஏற்படும் எனவும் தெரிவித்து அந்த ஆர்ப்பாட்டத்திற்கு தடையுத்தரவு விடுக்குமாறு பொலிஸார் கோரியிருந்தனர்.

இதனை கவனத்தில் எடுத்த வவுனியா மன்று, அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்வது மக்களின் ஜனநாயக உரிமை, அதனைத் தடுக்க முடியாது, ஆனால் அமைதிக்கும் பங்கம் ஏற்படும் வகையில் யாராவது செயற்பட்டால் பொலிஸார் உரிய நடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்து தடையுத்தரவுக் கோரிக்கையை நிராகரித்திருந்தது.



# வெறுப்பு அரசியலை பொன்னம்பலம் நிறுத்தவேண்டும்!



சி.இரத்தினவடிவேல்
(கொழும்புக் கிளைத் தலைவர்,
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி)

தமிழரசுக் கட்சிக்கும் அதன் தலைவர்கட்கும் எதிராக தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் சிறுபிள்ளைத்தனமான வெறுப்பு அரசியல் பிரசாரத்தை பொன்னம்பலம் உடனடியாக நிறுத்தவேண்டும்.

கடந்த வாரம் கிழக்கில் அவர் மேற்கொண்டிருந்த பிரசார நடவடிக்கையின்போது பல பொய்யானதும் திரிபுபடுத்தப்பட்டதுமான கருத்துக்களைத் தெரிவித்து தமிழர்களை ஏமாற்றி வாக்குகளை அபகரிக்கும் சூழ்ச்சிகரமான திட்டத்தை நிறைவேற்ற முயற்சிப்பதை எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது.

2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியின்போது புதிய அரசமைப்புக்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதற்காக நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாக மாறி பலவேறு குழுக்கள் அமைக்கப்பட்டன. அதில் ஏனைய தெற்கத்திய கட்சிகள், முஸ்லிம் கட்சிகளுடன் புளொட், ரெலோ கட்சியின் தலைவர்களுடன் தமிழரசுக் கட்சியும் பங்கேற்றது. அப்போது கூட்டமைப்பாக இருந்த மூன்று கட்சிகளினதும் தலைவர்கள் பல்வேறு குழுக்களிலும் பங்கேற்று அந்த அரசமைப்பு ஒரு வரைவாக உருவாகுவதற்கு மிகக் கடும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். அந்த வரைவு தயாரிக்கப்பட்டு இறுதியில் நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் அது நிறைவேற்றப்பட முன் மைத்திரிக்கும் ரணிலுக்குமிடையில் ஏற்பட்ட முறுகல் நிலையால் அது நிறைவேற்றப்படாமலே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

அந்த வரைவில் சமஷ்டி எனப் பெயர் குறிப்பிடப்படாதிருந்தபோதும் சமஷ்டிக்கு உரிய முக்கிய அமசங்களை அது கொண்டிருந்தது என்பதுதான் எமது முயற்சிக்குக் கிடைத்த வெற்றி. தமிழர் நலன்களைப் பாதுகாக்கக்கூடிய பல்வேறு அதிகாரங்கள் மாகாணசபைகளுக்குப் பகிரப்பட ஏற்படுகள் செய்யப்பட்டன. அத்தகைய அதிகாரங்களை மத்திய அரசு மீளப்பெற முடியாத வகையில் ஏற்பாடுகள் உட்புகுத்தப்பட்டிருந்தன. ஒற்றையாட்சி என்ற சொற்பதம் அகற்றப்பட்டது. சிங்களத்தில் அது வரை காலமும் ஒற்றையாட்சி (ஏக்கிய ராஜ்ய) என்கிற அர்தத்தைத் தெரிவிக்கும் அந்த சொற்பதத்திற்கு “ஒருமித்த நாடு“ என்கிற அர்த்தம் மட்டுமே எனவும், அது நாட்டின் ஆட்சிமுறை பற்றியதல்ல என்பதுவும் அந்த அரசமைப்பிலேயே தெளிவாச் சொல்லப்பட்டது. இந்த வரைவிலக்கணம் அதிலே கொடுக்கப்பட்டும் இருக்கிறது. இந்தப் பதத்தை இப்படிப் போடவேண்டுமென்ற முன்மொழிவை சுமந்திரனே செய்தார். பல எதிர்க் கோசங்களுக்கு மத்தியில் இறுதியாக அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவையெல்லாம் முன்னெப்போதும் எந்தவொரு சிங்கள அரசும் ஏற்க மறுத்த விடயங்கள்.

இதைத்தான் பொன்னம்பலம் திரிபுபடுத்தி தமிழர்களிடையே ஏமாற்றுத்தனமான அரசியலைச் செய்ய முற்படுகிறார். இந்த வரைவைத் தானே தயாரித்தேன் என்று சுமந்திரன் கூறினார் எனப் பொய் உரைக்கிறார். நான் அவருக்கு சவால் விடுகிறேன் – அப்படி அவர் கூறியதை நிரூபிக்குமாறு. சம்பந்தன் ஐயாவும் சுமந்திரனும் கடுமையாக அதற்காக உழைத்தார்கள். சித்தார்த்தனது பங்கும் குறிப்பிடக்கூடியது. ஆனாலும் ஒருபோதும் சுமந்திரன் அதனை தானே தயாரித்தார் என எங்குமே கூறவில்லை. இதன் தயாரிப்பில் கலாநிதி ஜயம்பதி விக்ரமரட்னவினதும் சுமந்திரன் அவர்களது பங்கும் அளப்பரியவை என்பது நாம் அறிந்ததே. அதைச் சுமந்திரனே சொல்லிக் காட்டியுமுள்ளார். ஆனால்

தொடர்ச்சி ▼

# வெறுப்பு அரசியலை பொன்னம்பலம் நிறுத்தவேண்டும்!

தொடர்ச்சி ▲

தானே தயாரித்தார் என அவர் சொன்னார் எனப் பொன்னம்பலம் கூறுவது பச்சைப் பொய்.

இதனை வைத்துக்கொண்டு, அவர் இரண்டு பச்சைப் பொய்களை மக்களிடையே விதைக்க முயல்கிறார். ஒன்று – தானே தயாரித்தார் என சுமந்திரன் கூறியதென்பது.

அடுத்தது – அந்த அரசமைப்பு நகல் தமிழரின் அபிலாசைகளைத் தீர்க்காத ஒற்றையாட்சி முறையிலானது என்பது.

இவை இரண்டுமே பொய்யானவை என அவருக்குத் தெரியும். ஆனாலும் அவர் திரும்பத் திரும்ப அந்தப் பொய்களை விதைக்கப் பார்க்கிறார்.

சமஷ்டி வந்தால் ஆனையிறவிற்கு அப்பால் தமிழர்கள் அரச சேவைகளில் ஈடுபடவோ, போகவோ முடியாது என்பது போன்ற ஏமாற்று கோசங்களை இவரது பேரன் வைத்து ஒற்றையாட்சிக்காக கோஷமிட்டமையை எல்லாம் நாம் மறந்துவிடவில்லை.

இப்போது எமது கட்சிக்கு சமஷ்டிப் பாடம் எடுக்க முனைவது விந்தையிலும் விந்தை. பேரனின் தவறை உணர்ந்து எமக்குப் பின்னால் சமஷ்டிக் கோரிக்கைக்கு பலம் சேர்க்க இவரது சந்ததிக்கு கிட்டத்தட்ட 50 வருடங்கள் தேவைப்பட்டுள்ளன. இப்போது இவர் விடும் ஏனைய தவறுகளைத் திருத்திக்கொள்ள இவர் சந்ததிக்கு இன்னும் 50 வருடங்கள் தேவைப்படக்கூடும். தமிழ் மக்களுக்கு இவரது போலியான பாடங்கள் தேவைப்படாது.

இவரது பேரன் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் இது போன்ற செய்கைகளை கடந்த காலத்தில் அரசியற்களத்தில் பார்த்தவன் என்கிற ரீதியில் இவர் அவரது அசல் வாரிசாக துரோக அரசியல் செய்கிறார் என்றுதான் கூறத் தோன்றுகின்றது.

தமிழரசுக் கட்சியின் கடும் பிரயத்தனங்களின் பின் அப்போதைய பிரதமர் டட்லியுடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து மாவட்ட சபைகள் மசோதாவின் வெள்ளை அறிக்கை நாடாளுமன்றத்தில் 1967 இல் சமர்ப்பிக்கப்பட்டபோது ஜீ.ஜீ.யும் இப்படித்தான் பொய்ப் பிரசாரங்களை அவிழ்த்துவிட்டார். இதில் ஒன்றுமில்லை, வெறும் “மா வட்டம்“ (பெரிய பூஜ்யம்) மட்டுமே என்று ஊரூராகப் பிரசாரம் முன்னெடுத்தார். இதே மாவட்டசபை மசோதாவிற்கு எதிராக சிங்களவர்கள் கிளர்ந்தார்கள். டட்லயின் வயிற்றில் மசாலா வடை “டட்லிகே படே மசாலா வடே“ என்று வன்மப் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. எதிர்ப்பைச் சமாளிக்க முடியாத டட்லி அந்த முயற்சியைக் கைவிட்டார்.

இது வரலாறு. இது இப்போது பேரனால் மீண்டும் எழுதப்படுகிறது. தமிழரசு மேற்கொள்ளும் நல்ல விடயங்கள் அனைத்தையும் திரிபுபடுத்தி பொய்ப் பிரசாரம் செய்வதில் இவர் பேரனை விட ஒரு படி மேலாகவே உள்ளார்.

சமர்ப்பிக்கப்பட்ட அரசமைப்பு நாடாளுமன்ற விவாதத்திற்காகவே சமர்ப்பிக்கப்பட்டது. அதில் மேலும் வேண்டிய திருத்தங்கள் செய்யப்பட்ட பின்பே நிறைவேற்றப்படுவதாக இருந்தது. அதில் ஏதாவது திருத்தங்கள் செய்யப்படவேண்டின் அதனை கட்சியாக தமிழசு செய்வதாக இருந்தது. பொன்னம்பலம் கூட அதில் திருத்தங்களை முன்மொழிய அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கும்.

அதைத்தான் அநுரா திஸநாயக்கா சொல்கிறார். அதிலிருந்து அரசமைப்பு விவகாரத்தை ஆரம்பிக்கலாம் என்று. அப்போது வேண்டிய திருத்தங்களை முன்வைப்பது எமது கடமை. அதைவிட்டுவிட்டு சுமந்திரன் அநுராவுடன் ஏதோ இணக்கப்பாடு வைத்திருக்கிறார், அது, இது என்று பொய்க் கூச்சல் போடுவதையிட்டு பொன்னம்பலத்திற்கு எமது கடும் கண்டனத்தைத் தெரிவிக்கிறோம்.

மேற் குறிப்பிட்ட அரசியல் யாப்பு வரைவு, பல பாதைகள் திறந்துவிடப்பட்டமை, வட–கிழக்கின் அபிவிருத்திக்காக தனி அமைச்சு உருவாக்கப்பட்டு கோடிக்கணக்கான ரூபா நிதி மூலம் வடக்கு கிழக்கில் பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டமை, ஆயிரக்கணக்கான ஏக்கர் நில விடுவிப்பு, சம்பூர் விடுவிப்பு, வட–கிழக்கின் பொது வைபவங்களில் இராணுவப் பிரசன்னம் நீக்கம், பல இராணுவ முகாம்கள், சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டமை, வடக்கு மாகாணத்திற்கு தமிழர் ஆளுநராக நியமிக்கப்பட்டமை, 200க்கும் மேற்பட்ட அரசியற் கைதிகள் விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அரசுக்கெதிராக ஆர்பாட்டங்கள் செய்வது, மாவீரர்நாள், திலீபன் நாள், அன்னை பூபதி நினைவுநாள் அனுட்டிக்கப்படுகின்றமை இவையெல்லாம் தமிழரசுக் கட்சியினதும், அதன் தலைவர்களினதும் சாதனையனயேயன்றி வேறென்ன? தமிழர் இருப்பு, காணி அபகரிப்பு, அடாத்தான விகாரைகள் இன்னும் பல சட்டப் போராட்டத்தை நடத்தியதும் வென்று காட்டியதும் சுமந்திரன் தவிர வேறு யார்?

தந்தை செல்வாவை “செவிடன்“ போன்ற தகாத வார்த்தைகள் கொண்டு பகிரங்க மேடைகளில் திட்டியவர் ஜீ.ஜீ. இப்போது பேரன் அது போன்றவாறாக சுமந்திரனை வசை பாடுகிறார். சுமந்திரன் வழிகாட்டலில் தமிழரசு இருக்கும்வரை இவர் போன்றவர்களது போலி நாடகங்கள் அரங்கேற முடியாது என்கிற ஆதங்கம்தான் காரணம்.

ஜே.வி.பி .அலைக்கு எதிராக தமிழ் மக்கள் தமது தேசிய உணர்வைக் கட்டி எழுப்பவேண்டிய சந்தர்ப்பம் இது எனவும், தமிழ்க் கட்சிகள் ஒருமித்த உணர்வுடன் இத்தேர்தலை அணுகவேண்டிய சந்தர்ப்பம் இது எனவும் தமிழ் அனுதாபிகள் பலரும் வேண்டுதல் விடுத்திருந்தனர். எழுதப்படாத, கூடி முடிவெடுக்காத, அந்தத் தீர்மானத்திற்கு அமைய தமிழரசுக் கட்சி ஏனைய பல்வேறு தமிழ்க் கட்சிகளின் குளறுபடியான அரசியலை விமர்சிக்காது தமது கொள்கை நிலைப்பாட்டை மட்டுமே வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறது. இதை கட்சியின் பலவீனமாகக் கருதி காங்கிரஸ் கட்சியும் விக்கினேஸ்வரன் கட்சியும் இத்தகைய வஞ்சகமான பொய்ப் பிரசாரங்களை மேற்கொள்வது மிகவும் கண்டிக்கத்தக்கது. அரசியல் அறத்திற்கு விரோதமானது.

பொன்னம்பலம் இதுவரை தமிழ் மக்களுக்காகச் சாதித்த ஒரு நல்ல விடயத்தைக் கூறட்டும். வெறுமனே வீதியோரங்களில் நின்று கூச்சல் போடுவதைத் தவிர இவரது சாதனைப் பட்டியலை வெளியிடட்டும் பார்க்கலாம். தமிழில் வைக்கோற்பட்டடை நாய்களை சில விடயங்களுக்கு உதாரணம் காட்டும் வழமை உண்டு. அதுதான் இந்த காங்கிரஸ் கட்சியின் செயற்பாடும். இது பேரன் காலம் தொட்டு நடைபெறும் விடயம். நாய் வாலை எவராலும் நிமிர்த்த முடியாது. சந்திரனைப் பார்த்து நாய் குரைக்கிறது என்றுவிட்டு நாம் எமது பணியை முன்னெடுக்கவேண்டியதுதான்.

# கேப்பாப்புலவு மீனவர்கள் சங்கத்தின் தலைவரை சந்திரசேகரின் கையாள்கள் நையப்புடைத்தனர்

## ஜே.வி.பி. அராஜகம் என்கின்றார் கஜேந்திரகுமார் எம்.பி.



(பிரபாகரன் டிலக்சன்)

இராமலிங்கம் சந்திரசேகரின் கையாள்கள் கேப்பாப்புலவு மீனவ சங்க தலைவர் செபஸ்தியன்பிள்ளை சுகிந்தனை மோசமாக தாக்கியிருக்கிறார்கள். தமிழ் மக்கள் இவ்வாறான சிங்கள இனவெறி பிடித்த ஜே.வி.பிக்கு வாக்களிப்பது மடத்தனமானது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த அரசாங்கம் தாங்கள் புதியதொரு அரசியல் கலாசாரத்தைக் கடைப்பிடிக்கின்றனர் எனவும், முன்னர் ஆட்சியில் இருந்த ஆட்சியாளர்கள் மக்களை மதிக்காமல் செயல்பட்டனர் எனவும், தாங்கள் மக்களோடு மக்களாக செயல்படுகின்ற அரசியல்வாதிகள் எனவும் மக்கள் மத்தியில் படம் ஒன்றை காட்டுகிறார்கள்.

நேற்றைய தினம் (நேற்று முன் தினம்) கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் உள்ளூராட்சித் தேர்தல் பிரச்சாரத்திற்காக முல்லைத் தீவிற்கு சென்றிருந்தார். முல்லைத் தீவு – கேப்பாப்புலவு மீனவ சங்க தலைவர் செபஸ்தியன்பிள்ளை சுகிந்தனை சந்தித்து கலந்துரையாடியிருக்கிறார்.

இதன்போது கடற்தொழில் சங்க தலைவர் தங்களுடைய பிரதேசத்தில் உள்ள குறைகளைச் சொல்லி தன்னுடைய ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். குறிப்பாக நந்திக் கடலுக்குச் செல்லக்கூடிய வீதி 15 வருடங்களாக புணரமைக்கப்படவில்லை. முன்னைய ஆட்சியாளர்களிடமும் தங்கள் கிராமத்தில் உள்ள குறைகளை எடுத்துச் சொல்லியும் அவை நிவர்த்தி செய்யப்படவில்லை. உங்களுடைய ஆட்சியிலும் இப்படித்தான் நடக்கும் என தன்னுடைய மனதில் உள்ள ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இதன்போது இராமலிங்கம் சந்திரசேகரின் கையாள்கள் கேப்பாப்புலவு மீனவ சங்க தலைவர் செபஸ்தியன் பிள்ளை சுகிந்தனை மோசமாக தாக்கியிருக்கிறார்கள். அவர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்வதற்குகூட அச்சப்படுகின்றார். அந்தளவிற்கு அமைச்சர் சந்திரசேகரின் கையாள்கள் மோசமாக நடந்துகொண்டிருக்கிறார்கள்.

இது தொடர்பில் கேப்பாப்புலவு மீனவ சங்க தலைவருடன் தொலைபேசியூடாகக் கதைத்து உறுதிபடுத்தியிருக்கின்றோம். நாட்டில் தற்போது ஆயுதக் கலாச்சாரம் தலை தூக்கி உள்ள நிலையில் இந்த தாக்குதல் விவகாரம் சர்வதேசத்திற்கும், மனித உரிமை அமைப்புக்களுக்கும் சென்றால் மட்டுமே பாதிக்கப்பட்டவருக்கு பாதுகாப்பு இருக்கும் என்பதை எடுத்துரைத் திருக்கின்றோம்.

மக்கள் ஒரு விடயத்தை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். இங்கு எந்த ஒரு மாற்றமும் இடம்பெறவில்லை. கடந்த காலங்களில் இருந்த அரசாங்கம் எவ்வளவு தூரம் மனித உரிமைகளுக்கு எதிராக செயற்பட்டு மக்களை ஒரு பயங்கரவாதத்திற்குள் தள்ளியதோ அதுபோலவே இந்த ஜே.வி.பி. அரசாங்கமும் செயல்படுகின்றது.

ஜே.வி.பி. மிகவும் கட்டுக்கோப்பான கட்சி. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் எவ்வாறு மிகவும் கட்டுக் கோப்புடன் போராளிகளை வழிநடத்தியதோ அதைப்போலவே ஜே.வி.பியும் செயற்படுகின்றது. கட்சியின் மேலிடத்தில் இருந்து உத்தரவு வராமல் கடற்தொழில் சங்க தலைவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்காது.

கடற்தொழில் சங்க தலைவர் அமைச்சர் சந்திரசேகரை தாக்க முற்பட்டார் எனவும் அதனாலேயே தாம் பதில் தாக்குதல் மேற்கொண்டனர் எனவும் இப்போது ஜே.வி.பி உறுப்பினர்கள் பொய்யான தகவல் ஒன்றைப் பரப்பி வருகின்றனர். இந்த பொய்யிலும் ஒரு விடயம் புலனாகின்றது. கடற்தொழில் சங்க தலைவர் மீது தாக்குதல் மேற்கோண்டதை அவர்களே ஏற்றுக் கொண்டுள்ளனர்.

எனவே தமிழ் மக்கள் இவ்வாறான சிங்கள இனவெறி பிடித்த ஜே.வி.பிக்கு வாக்களிப்பது மடத்தனமானது. தமிழ் மக்கள் தெளிவாக எதிர்வரும் தேர்தலில் தமிழ்த் தேசிய பேரவைக்கு வாக்களிக்க வேண்டும். –என்றார்.

அமைச்சர் சந்திரசேகரின் ஆதரவாளர்களால் கடற்தொழில் சங்க தலைவர் தாக்கப்பட்டார் என எழுந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் அமைச்சர் சந்திரசேகரிடம் வினாவியபோது அதற்கு பதிலளிக்க அவர் மறுத்துவிட்டமை குறிப்பிடதக்கது.

# பொலிஸ் உத்தியோகத்தர் வவுனியாவில் விபத்தில் பலி

(கி.வசந்தன்)

வவுனியா, மூன்று முறிப்பு பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார் எனப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா நகரில் இருந்து மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் பாரவூர்தி ஒன்றில் மோதியதில் விபத்து இடம்பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்த அவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

சம்பவத்தில் வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் லக்ஸ்மன் பண்டார என்ற பொலிஸ் உத்தியோகத்தரே சாவடைந்துள்ளார்.

அவரது மரணம் தொடர்பான விசாரணையினை வவுனியா பொலிஸார் மற்றும் திடீர்மரண விசாரணை அதிகாரி ஹறிபிரசாத் ஆகியோர் முன்னெடுத்திருந்தனர்.




# நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை, வீடமைப்பு அமைச்சரும் அந்த அமைச்சின் பிரதி அமைச்சரும் நேற்று யாழ்ப்பாணத்தில்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக மற்றும் பிரதியமைச்சர் டி.பி.சரத் ஆகியோர் நேற்று பல்வேறு இடங்களுக்கு விஜயம் மேற்கொண்டனர்



நேற்று காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் மாநகரசபைக்காக புதிதாக அமைக்கப்பட்டுவரும் கட்டடத்தை அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர். இதனை உடனடியாக ஆரம்பிப்பது தொடர்பிலும் துறைசார் அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

அதனைத் தொடர்ந்து மதியம் 12 மணியளவில் யாழ்ப்பாணம் – கீரிமலையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையை பார்வையிட்டனர். அதனை மக்களுக்கு பயண்படும் வகையில் மாற்றுவது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 1.30 மணியளவில் யாழ்ப்பாணம் – குருநகர் பகுதியில் அமைந்துள்ள ஐந்து மாடி குடியிருப்பிற்குச் சென்று பார்வையிட்டனர். அங்கு மேற்கொள்ளப்படவேண்டிய உட்கட்டுமான பணிகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இதன்போது கடற்தொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், நாடச்ளுமன்ற உறுப்பினர்களான சிறீபவானந்த ராஜா, றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, நகர அபிவிருத்தி சபை அதிகாரிகள் மற்றும் ஏனைய திணைக்களங்களின் துறைசார் அதிகாரிகள் உட்பட பலர்பங்கேற்றனர்.















# சாயி பாபாவின் 14ஆவது மகாசமாதி தின வைபவத்தில்

# தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார அணியினர்

தேசிய மக்கள் சக்தியின் “வெற்றி நமதே ஊர் நமதே“ தேர்தல் பிரசார அணியைச் சேர்ந்த தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், கொழும்பு வடக்கு பிரதான அமைப்பாளருமான என். சிவானந்தராஜா தலைமையில் கொழும்பு மாநகர சபை மேயர் வேட்பாளர் வ்ராய் கலி பல்தலார், பிரதி மேயர் வேட்பாளர் ஹேமந்த வீரக்கோன், பாமன்கடை வட்டார வேட்பாளர் சண் குகவரதன், கொட்டாஞ்சேனை வடக்கு வேட்பாளர் காயத்திரி விக்கிரமசிங்க

ஆகியோர் கொட்டாஞ்சேனை ஸ்ரீ சத்ய சாயிபாபா மத்திய நிலையத்தில் பாபாவின் சத்ய சாயி பாபாவ–ின் 14 ஆவது மகாசமாதி தின பூஜை கடந்த 24 ஆம் திகதி நண்பகல் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டனர்.

அவர்களை வரவேற்ற மத்திய நிலையத்தின் தலைவர் எஸ். என். உதயநாயகம் அவர்களுக்கான கௌரவத்தை வழங்குகின்றமையையும் பூஜையில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

















# கிழக்குப் பல்கலைக்கழக நிதி மோசடிகள் குறித்து விசாரணை செய்ய ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தல்





(க.சரவணன்)

கிழக்கு பல்கலைக்கழகததில் பல் வேறு துறைகளில் இடம்பெற்றுள்ளவை எனக் கூறப்படும் பாரிய நிதி மோசடிகள் தொடர்பாக உடனடியாக விசாரணை செய்து அறிக்கை சமர்பிக்குமாறு உயர்கல்வி அமைச்சுக்கு ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வழங்கப்பட்ட அறிவுறுத்தலையடுத்து உயர்கல்வி அமைச்சு அது பற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

அந்தப் பல்கலைக்கழகத்தில் கடந்த காலத்தில் மாணவர்களுக்கு வழங்கிய மாகாபொல புலமைப்பரிசில், விளையாட்டுத்துறை, ஆய்வு மகாநாடுகள் மற்றும் அபிவிருத்த. நடவடிக்கைகளில் பாரிய நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாக பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள், விரிவுரையாளர்கள் ஜனாதிபதிக்கு முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டுக்கமைய ஜனாதிபதி செயலகம் உயர்கல்வி அமைச்சுக்கு அறிவுறுத்தல் வழங்கியதையடுத்து இந்த நிதி மோசடி தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக் குழுவை உயர்கல்வி அமைச்சு கோரியுள்ளது. இதையடுத்து இது தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஸ்கந்தா - மகாஜனா மாபெரும் கிரிக்கெட் சமர் இன்றும் நாளையும் கந்தரோடை மைதானத்தில்

## பிரதம விருந்தினராக பொறியியலாளர் மயிலுப்பிள்ளை சிவரூபன்






சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரிக்கும் இடையிலான 23 ஆவது மாபெரும் கிரிக்கெட் மோதல் இன்றும் நாளையும் காலை 8 மணி முதல் கந்தரோடையில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற இருக்கின்றது.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் ரி.லோகராஜா, மகாஜனக் கல்லூரி அதிபர் ஐ.புஷ்பரத்தினம் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெறும் இந்த ஆட்டத்தின் போது பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற மென்பொருள் பொறியியலாளர் மயிலுப்பிள்ளை சிவரூபன் கலந்து கொள்கின்றார்.

விசேட விருந்தினர்களாக ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழைய மாணவர் டாக்டர் புவனேந்திரநாதன் ஆதவனும், மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவரான இலங்கை மின்சார சபையின் வடமாகாணக் கணக்காளர் செல்வஸ்கந்தன் உமாகாந்தனும் பங்குபற்றுகின்றனர்.

இன்றைய நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றும் மயிலுப்பிள்ளை சிவரூபன் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியினதும், யாழ்ப்பாணம் இந்து கல்லூரியினதும், யாழ் பல்கலைக்கழகத்தினதும் பழைய மாணவர் ஆவார். யாழ் மருத்துவ பீடத்தில் உயிரியல் இரசாயனத்தில் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்த அவர் பட்ட ஆய்வையும் அங்கு மேற்கொண்டிருந்தார்.

ஸாம்பியாவில் சில ஆண்டுகள் போதனாசிரியராகவும், பின்னர் நியூயோர்க் சிட்டி யூனிவர்சிட்டியில் கணினி விஞ்ஞானத்தைப் பூர்த்தி செய்துகொண்டு மென்பொருள் பொறியியலில் முறைமை மதிப்பாய்வாளராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் புகழ்பெற்ற உதைபந்தாட்ட வீரனாகப் பல சாதனைகளைப் புரிந்த சிவரூபன் பாடசாலைக் காலத்தில் ஹொக்கி விளையாட்டிலும் பெரிதும் மதிக்கப்படும் வீரராகக் கணிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலை நாள்களில் பெரிதும் மெச்சப்பட்ட ஒரு விளையாட்டு வீரர், 45 ஆண்டுகளின் பின்னர் இப்போதைய மாபெரும் துடுப்பாட்டத்தில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.




# வடக்கு ஆளுநர் றீச்ஷாவுக்கு விஜயம்

வடக்கில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளவர்கள் எதிர்கொள்ளும் சவால்களைக் கண்டறியும் வகையில், கிளிநொச்சி இயக்கச்சியில் அமைந்துள்ள றீச்ஷா பூங்காவுக்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று வெள்ளிக்கிழமை பயணம் மேற்கொண்டார்.

அதன் நிறுவுனரும் தலைவருமான க.பாஸ்கரன் ஆளுநரை வரவேற்றதுடன், 150 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள அந்தப் பூங்காவை ஆளுநருக்குச் சுற்றிக் காண்பித்தார். அதன் பின்னர் றீச்ஷா நிறுவனத்தினருடனான சந்திப்பில் ஆளுநர் கலந்து கொண்டார்.

அரச திணைக்களங்களின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெறாமை, அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதில் இழுத்தடிப்புக்கள், போக்குவரத்து வசதியீனங்கள், உட்கட்டுமான வசதிகள் போதாமை உள்ளிட்ட பல்வேறு சவால்கள் தொடர்பில் ஆளுநருக்கு எடுத்துக் கூறப்பட்டது.

அத்துடன் முதலீட்டாளர்கள் இங்கு வரவேண்டும் என்று தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், இவ்வாறான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து கொடுப்பதே அவர்கள் ஆர்வத்துடன் முதலிடுவதற்கான சூழலை உருவாக்கும் என்றும் ஆளுநருக்குச் பாஸ்கரன் சுட்டிக்காட்டினார்.











# இன்றைய ராசி பலன்கள் - 26.04.2025




உங்கள் வளர்ச்சியில் மிதமான பலன்களைக் காண்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண பொறுமையும் உறுதியும் அவசியம்.

நேரமின்மை காரணமாக உங்கள் பணியில் தாமதம் காணப்படும். பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நடக்க வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமுடன் செயல்பட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வை வெளிப்படுத்த இயலாது. உறவில் நல்லிணக்கம் ஏற்படுத்திக் கொள்ள முயற்சி எடுப்பது நல்லது. தேவையற்ற உணர்வுகளுக்கு இடம் கொடுக்காதீர்கள்.

பண வரவு குறைந்து காணப்படும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் சேமிப்பு உயரும். பல் மற்றும் கண் எரிச்சலால் பாதிப்பு காணப்படும்.




இன்று நீங்கள் சுறுசுறுப்பாக இருப்பீர்கள். உங்களிடம் ஆற்றல் அதிகமாக காணப்படும். இதன் மூலம் நீங்கள் சுய முன்னேற்றம் காண்பீர்கள். நேர்மறையான மாற்றங்கள் மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நீங்கள் நிரூபிக்க இயலும். உங்கள் தன்னம்பிக்கை மற்றும் திறமை மூலம் இது சாத்தியம்.

உங்கள் துணையுடன் இனிமையாகப் பேசுவீர்கள். உங்களின் இனிமையான அணுகுமுறை அவரை மகிழ்விக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் பண வரவில் திடீர் ஏற்றம் காணும் அதிர்ஷ்டம் காணப்படும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க தேவையான தைரியம் மற்றும் உறுதி உங்களிடம் காணப்படும்.




உங்கள் இலக்குகளை அடைவதற்கு போதிய அதிர்ஷ்டம் காணப்படும். நீங்கள் மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் காணப்படுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுக்க இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பணியிடத்தில் உங்கள் திறமைக்கு பாராட்டு பெறுவீர்கள் . புதிய வேலை வாய்ப்புகள் உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

உங்கள் துணையுடன் அன்பான நேர்மையான உறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையிலான உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

உங்கள் கையில் இருக்கும் பணம் மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயர்வதற்கான அதிக வாய்ப்புகள் உள்ளன.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். இசை கேட்பது திரைப்படம் பார்த்தல் போன்ற நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதன் மூலம் பதற்றத்தைக் குறைக்கலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். அதிக பணிகள் காரணமாக சில பணிகள் நிலுவையில் இருக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இருவரும் எதிர்மறையான கருத்துக்களை கொண்டிருப்பீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். நீங்கள் போதிய பணம் சம்பாதிக்க இயலாது.




இன்று காணப்படும் பதற்றமான சூழ்நிலையை நீங்கள் பொறுமையுடன் கையாள வேண்டும். ஆன்மீகத்தில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் பெறலாம். உங்கள் நலனில் கவனம் எடுக்க வேண்டும். இறை வழிபாடு அதற்கு உதவும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவு காணப்படாது. உங்களின் நேர்மை உங்கள் மேலதிகாரிகளால் சந்தேகிக்கப்படும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது. அகந்தைப் போக்கு காணப்படும். இதனால் உங்கள் துணையுடனான உறவில் பிரச்சினை ஏற்படும்.

பணத்தை கையாளும் போது கவனம் தேவை. கவனக் குறைவு காரணமாக பயணத்தின்போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்கள் இலக்குகளை அடைய இன்று மிகச் சிறந்த நாள். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் காணப்படும். இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இன்றைய நாளை இனிமையாகக் கழிப்பீர்கள். மகிழ்ச்சியான மன நிலை காரணமாக நல்லுறவு காணப்படும்.

இன்று அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. உங்கள் சேமிப்பு உயர்வதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திடமாக இருப்பீர்கள். நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று நீங்கள் மகிழ்ச்சியுடனும் உற்சாகமாகவும் காணப்படுவீர்கள். இன்று உங்களிடம் உற்சாகம் காணப்படும். நீங்கள் வளர்ச்சிப் பாதையில் முன்னேறுவீர்கள்.

கடின உழைப்பின் மூலம் உங்கள் பணிக்கான நற்பலன் பெறுவீர்கள். உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கப் பெறுவார்கள். இதனால் மகிழ்ச்சியடைவீர்கள்

உங்கள் துணையுடன் அன்பான உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இந்த நேர்மையான போக்கின் காரணமாக உங்கள் துணையுடன் அன்பாக நடந்து கொள்வீர்கள்.

நிதி நிலைமையைப் பொறுத்தவரை மகிழ்சிகரமான நிலை காணப்படும். நீங்கள் சுப நிகழ்சிகளுக்காக பணம் செலவு செய்வீர்கள்.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. நீங்கள் நம்பிக்கையுடன் நேர்மறையான எண்ணங்களுடன் இருக்க வேண்டும். இந்த அணுகுமுறை இன்று மிகவும் அவசியம்.

உங்கள் கடின உழைப்பினால் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும். இது உங்களுக்குச் சற்று கவலை ஏற்படுத்தும்.

உங்கள் துணையுடன் இனிமையாகப் பேசுவது நல்லது. கருத்து வேறுபாடு ஏற்படாமல் இருக்க இது உதவும்.

இன்று நிதி நிலைமை கையாள்வதில் சற்று கடினம் காணப்படும். பணம் சேமிப்பதற்கான சாத்தியம் குறைவு.

இன்று பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் பல் மருத்துவரை ஆலோசிப்பது சிறந்தது. உங்கள் உணவு முறையில் கவனம் தேவை.

# இன்றைய ராசி பலன்கள் - 26.04.2025




உங்கள் மனதில் அவநம்பிக்கை உணர்வுகள் ஏற்படலாம். இதனை நீங்கள் தவிர்க்க வேண்டும். இன்று நீங்கள் அதிகப்படியான சுமையை சுமப்பது போல உணர்வீர்கள். இது உங்கள் கற்பனையே.

உங்களுக்கு சாதகமான பலன்கள் பெற நீங்கள் கவனமாகப் பணியாற்ற வேண்டும். திட்டமிட்ட செயல் மூலம் நீங்கள் உங்கள் பணியில் வெற்றி காணலாம்.

நீங்கள் உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் நீங்கள் ஆரோக்கியமான உறவை பராமரிக்கலாம்.

இன்று செலவுகள் அதிகம் காணப்படும். இழப்பை தவிர்க்க நீங்கள் திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும்.

கண் எரிச்சல், முதுகு வலி மற்றும் கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்றைய நிகழ்வுகளில் நீங்கள் வருத்தமான மனநிலையில் இருப்பீர்கள். இன்றைய விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. நன்கு பணி செய்ய முயற்சி செய்வது அவசியம்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.இதனால் உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதங்கள் ஏற்படும்.இதனை தவிர்க்கவும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். பொறுப்புகள் அதிகமாக இருப்பதால் உங்கள் குடும்பத்துக்காகச் செலவு செய்வீர்கள்.




இன்று மிகவும் பயனுள்ள நாளாக இருக்கும். நீங்கள் உறுதியுடனும் புத்துணர்ச்சியுடனும் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகள் உங்களுக்கு லாபம் பெற்றுத் தரும்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். நீங்கள் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் உற்சாகத்துடன் உங்கள் பணிகளை மேற்கொள்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நட்பான உறவு முறை மேற்கொள்வீர்கள். இதன் மூலம் உங்கள் துணை உங்கள் உறவின் மதிப்பை உணர்ந்து கொள்வார்.

உங்களின் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள இன்று போதிய பணம் காணப்படும். உங்களால் சேமிக்கவும் இயலும்.




இன்று குழப்பமான மனநிலையில் இருப்பீர்கள். இதனால் உங்கள் வளர்ச்சி தாமதப்படும். இன்று உங்கள் நலனுக்காக நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம்.

பணியிடச் சூழல் உற்சாகமாக காணப்படாது.பணிகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். அனுசரித்துப் போவதன் மூலம் பணியிடச் சூழல்களை நீங்கள் சமாளிக்கலாம்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாக இருக்க வேண்டும். உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே கருத்து வேறுபாடு காணப்படும். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

உங்கள் வீட்டு புனர் நிர்மானத்துக்குகாக பணம் செலவு செய்வீர்கள். இதனால் உங்கள் செலவுகள் அதிகரிக்கும்.

# மட்டு. கிரான்குளத்தில் பாடசாலையில் 16 வயது மாணவி மயங்கி வீழ்ந்து சாவு

(கனகராசா சரவணன்)



மட்டக்களப்பு கிரான்குளம் பாடசாலை ஒன்றில் வகுப்பறையில் 16 வயது மாணவி ஒருவர் மயங்கி வீழ்ந்த நிலையில் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற நிலையில் உயிரிழந்த சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிரான்குளம் 8 பிரிவு, அமரசிங்க வீதியைச் சேர்ந்த – க.பொ. சாதாரண தரத்தில் கல்விகற்றுவரும் 16 வயதுடைய இராஜன் வினோஜினி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கிரான் குளம் விநாயகர் மகா வித்தியாலயத்தில் கல்விகற்றுவரும் இந்த மாணவி வழமைபோல நேற்று பாடசாலைக்குச் சென்று கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த நிலையில் வகுப்பறையில் திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார்.

இதனையடுத்து மாணவியை செட்டிபாளையம் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று, அங்கிருந்து களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் வைத்தியசாலைய பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியைப் பெறும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.